IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No.100/2022**

**நாள்– 28.06.2023**

**சங்கர்**

**ம.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

என்னுடைய வயது, வருமானம், வேலை குறித்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குற்ற வழக்கில் என் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் அது பொய்யாகும். முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் புலன்விசாரணை செய்யப்பட்டு என் மீது தான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். ஆனால் நான் காயம் பட்டு மயக்கமடைந்த நிலையில் நான் விபத்து ஏற்படுத்தியதாக பொய்யாக புகார்அளிக்கப்பட்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. என் மீது தவறு இல்லை என்பதற்கு முதல் தகவல்அறிக்கையை எதிர்த்தோ, குற்றப்பத்திரிக்கையை எதிர்த்தோ காவல் துறை உயர் அதிகாரிகளிடமோ, நீதிமன்றத்திலோ மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். குற்றப்பத்திரிக்கையின் அடிப்படையில் சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நான் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தியிருக்கிறேன் என்றால் நான் படிப்பறிவில்லாதவன் என்பதால் எதற்காக என்னை நீதிமன்றத்திற்கு அழைத்தார்கள் என்று தெரியாமல் நான் பணம் கட்டினேன். தெரியாமல் அபராதம் செலுத்திவிட்டேன் என்பதற்கு நீதித்துறை நடுவரிடம் புகார் எதுவும் அளிக்கவில்லை. முழு மனதோடு குற்றத்தை ஒப்புக்கொண்டு தான் அபராதம் செலுத்தியிருக்கிறேன் என்றும் இப்போது நஷ்டஈடு கிடைக்காது என்பதற்காக இவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குற்ற வழக்கில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதால் தான் எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்றும், அபராதம் செலுத்தியபின்பும் நீதிமன்றத்தில் அது குறித்து புகார் எதுவும்அளிக்கவில்லை என்றும், அதனால் தான் ஆவணங்கள் எதுவும்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் கூறியவாறு 1ம் எதிர்மனுதாரர் இந்த விபத்திற்கு எவ்வித காரணமும் இல்லை என்றால் சரியல்ல. அவர் சாலைவிதிகளை மதித்தும், கவனமாகவும் தான் வாகனத்தை ஓட்டினார் என்றால் சரியல்ல. குற்றப்பத்திரிக்கை எனக்கு எதிராக இருக்கிறது என்பதால் தான் என் தரப்பில் குற்றப்பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றும், அதுவும் ஆறிவிட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் எனக்கு எவ்வித வருமான இழப்பும், நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவும், அதிவேகமும் காரணம் என்பதால் தான் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் பின்பகுதியில் மோதியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கைகளான ம.சா.ஆ.6, 7 ஆவணங்களில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு பின்புறமும், என்னுடைய வாகனத்திற்கு முன்புறமும் சேதாரங்கள் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. நான் அரசாங்க மருத்துவமனையில் தான் சிகிச்சை எடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் மருத்துவ செலவுகளின் கீழ் எனக்கு எவ்வித தொகையும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் இந்த விபத்திற்கு எந்த விதத்திலும் காரணமல்ல என்பதால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் வழங்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. நான் 3ம் எதிர்மனுதாரரிடம் பணிக்கு இருப்பதாலும், 3ம்எதிர்மனுதாரரின் வாகனம் 4ம் எதிர்மனுதாரரிடத்தில் காப்பீடு செய்யப்பட்டிருப்பதாலும் எனக்கு ஏதாவது இழப்பீடு கிடைக்கவேண்டுமென்றால் 3, 4 எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியிருக்கும் இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து நேரத்தில் நான் ஆலங்குளத்தில் நாலுவாசன்கோட்டைக்கு வந்துகொண்டிருந்தேன். எனக்கு முன்பாக லோடு ஆட்டோ ஓவர் டேக் செய்து வேகமாக சென்றது. திடீரென்று பிரேக் அடித்து கட் செய்து திரும்பிவிட்டார். அவர்

இந்தபிரேக் போடவில்லை என்றால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது. விபத்தில் காயமடைந்தவுடன் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி 3ம் எதிர்மனுதாரர் அவர் மீது வழக்கு பதிவு செய்துவிடக்கூடாது என்பதற்காக என் மீது புகார் அளித்து வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. எனக்கு படிக்க, எழுதத் தெரியாது. குற்ற வழக்கு சம்பந்தமாக என் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. இந்த விபத்திற்கு என் மீது தவறு கிடையாது. அதனால் 2 வாகனங்களின் காப்பீடு கழகங்கள் மீது நஷ்ட ஈடு கோரியிருக்கிறேன். நான் ஓட்டிச் சென்ற வாகனம் என் அப்பாவின் வாகனம் ஆகும். குற்ற வழக்கு என் மீது பதிவு செய்யப்பட்டதால் நஷ்ட ஈடு கிடைக்கவேண்டுமென்றால் தொழிலாளர் நீதிமன்றத்தில் தான் கோரவேண்டும் என்றால் சரியல்ல. விபத்தில் ஈடுபட்டது காரா, லோடு ஆட்டோவா என்பது குறித்து மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சீர்த்திருத்தம் செய்யவேண்டும் என்றும், இல்லாதபட்சத்தில் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு நானும் காரணம் என்று குற்ற வழக்கு ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டிருப்பதால் 4ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டகாயங்களில் வெளிக்காயங்கள் ஆறிவிட்டது. உள் காயங்கள் ஆறவில்லை என்றால் சரிதான். தென்காசி மருத்துவக்குழுமத்தின் முன்னிலையில் ஆஜராகி அறிக்கை பெற்றால் தான் எனக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை குறித்து தெரியவரும் என்றால் நான் ஆஜராகிவிட்டேன். இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரும் காரணம் என்பதால் 1, 2 எதிர்மனுதாரர்கள் தான் எனக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்றும், 4ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.06.28 17:05:55 +0530

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.100/2022**

| | | |
|---|---|---|
| Name | : | சொக்கலிங்கம் **Pw2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28th day of June 2023.

**முதல் விசாரணை**

நான் எம்சிஓபி.99/2022 வழக்கில் மனுதாரர் ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. எனக்கு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை வழங்கிய விபத்து பதிவேட்டின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.14 ஆகும். எனது கால் முட்டில் ஏற்பட்ட காயத்திற்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எடுத்த எக்ஸ்ரேயின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.15 ஆகும். மனுதாரருக்கு திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கிய தொடக்க நிலை நோய் ஆவணத்தின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.16 ஆகும். மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

எனது வயது, வருமானம், வேலை குறித்த ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சென்ற வாகனத்தை ஓட்டிய சங்கர் மீது தான்

முதல் தகவல் அறிக்கையும், குற்றப்பத்திரிக்கையும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். குற்ற வழக்கில் சங்கர் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தியிருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்திற்கு சங்கர் தான் காரணம் என்பதால் 1, 2 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் ஆறிவிட்டது என்றால் வலி இருக்கிறது. எனக்கு ஏற்பட்ட காயங்கள் எல்லாம் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் எனக்கு வருமான இழப்போ, நிரந்தர ஊனமோ இல்லை என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்து மாதம் 25 ஆயிரம் வரை சம்பாதித்தேன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எனக்கும், என்னுடைய வாகனத்தை ஓட்டிய சங்கருக்கும் இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக என்னுடைய வாகனத்தை ஓட்டிய சங்கர் மெதுவாகத்தான் வாகனத்தை ஓட்டினார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியிருக்கும் இழப்பீடு அதிகம் என்றும், 2 ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

__4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை__

விபத்திற்கு முன்பாக நான் விவசாயம் செய்து வந்தேன். விபத்து சமயத்தில் சங்கர் ஓட்டிய வாகனத்தில் நாங்கள் கழுகுமலையில் இருந்து நாலுவாசன்கோட்டைக்கு வந்துகொண்டிருந்தேன். நான் ஆட்டோவில் பின்னால் உட்கார்ந்திருந்தேன். எங்களது வாகனத்திற்கு முன்பாக சரக்கு வாகனம் எந்த வித சிக்னலும் செய்யாமல் இடதுபுறமாக திடீரென்று திருப்பியதால் இந்த விபத்து ஏற்பட்டது. இந்த விபத்திற்கு முன்னே சென்ற வாகனத்தின் ஓட்டுநர் தான் காரணம். இந்த விபத்து சம்பந்தமாக சங்கர் மீது புகார் கொடுத்தார்களா என்றோ, குற்ற வழக்கு சம்பந்தமாகவோ எனக்கு எதுவும் தெரியாது. இந்த விபத்திற்கு லோடு ஆட்டோ ஓட்டுநர் தான் காரணம் என்பதால் எனக்கு நஷ்ட ஈடு கிடைக்கவேண்டுமென்றால் லோடு ஆட்டோ உரிமையாளரும், அதன் காப்பீடு கழகமும் தான் நஷ்ட ஈடு வழங்கவேண்டும் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு சங்கர் காரணமில்லை என்பதால் இந்த வாகனத்தின் உரிமையாளரோ, காப்பீடு கழகமோ எங்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டியதில்லை

என்றால் சரியல்ல. அவர்களைப் பொறுத்து மனுவைத் தள்ளுபடி செய்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.06.28 17:06:04 +0530